**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Case Number | : | CC 296/2020 |
| Prosecution Witness | : | அ.சா.3 |
| Name | : | பிரபாகர் |
| Father's/Husband Name: | : | ஆறுமுகசாமி |
| Address : | : | பொள்ளாச்சி, சமத்தூர் கிராமம் |
| Age | : | 34/2024 |

<u>தேதி: 11 /09/2024</u>

<u>சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S.தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது</u>

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் பி.இ சிவில் இன்ஜினிரிங் படித்து விட்டு பல்லடத்தில் வேலை பார்த்துகொண்டிருக்கிறேன். அ.சா. 1 மற்றும் அ.சா.. 2 ஐ தெரியும். அசா. 2 எனது உறவினர். அவர் மூலம் அ.சா. 1 ஐ தெரியும். 1வது எதிரி ஹாரிப் ஐ தெரியும். 5வது எதிரியை தெரியாது. 2, நபிஷா பானுவை ஒருமுறை பார்த்துள்ளேன். 3, 4 எதிரிகளை பார்த்ததில்லை. நான் இன்ஜினிரிங் முடித்துவிட்டு வேலைக்காக காத்திருந்தபோது அ.சா. 2 விஜய்கண்ணன் வெளிநாட்டில் வேலை இருப்பதாக சொன்னார். விஜய்கண்ணன் அ.சா. 1 திருமூர்த்தியின் போன் நம்பரை எனக்கு கொடுத்தார். நான் அ.சா. 1 ஐ போன் மூலம் தொடர்பு கொண்டு எனக்கும் வெளிநாட்டில் வேலை ஏற்பாடு செய்துதரும்படி கேட்டேன். அ.சா. 1 என்னுடைய கல்வி

சான்றிதழ்களை அவருடைய மெயில் ஐடிக்கு அனுப்ப சொன்னார். நான் அனுப்பினேன். திருமூர்த்தி மெடிக்கல் டெஸ்ட் எடுக்க வேண்டும் என்று சொன்னார். அதனால் நான் திருச்சிக்கு சென்றேன். திருச்சிக்கு சென்றிருந்தபோது அ.சா. 1 யையும் 1 வது எதிரி ஹாரிப் – யையும் திருச்சி மத்திய பேருந்து நிலையத்தில் பார்த்தேன். அவர்களிடம் நான் எடுத்த மெடிக்கல் சர்டிவிக்டையும், கல்வி சான்றிதழ்களையும் கொடுத்தேன். 18.05.2016 அன்று நபிஷா பானு என்பவரின் வங்கி கணக்கில் ரூபாய் ஐயாயிரத்து ஐந்நுறு செலுத்தினேன். அதன்பிறகு திருமூர்த்தி என்னுடைய மெயில் ஐடிக்கு முதலில் ஆபர் கடிதமும், அதன்பிறகு விசா நகலும் அ்னுப்பினார். அதன்பிறகு 10.06.2016 அன்று ஹாரிப் வங்கி கணக்கில் ரூபாய் பத்தாயிரம் செலுத்தினேன். 18.06.2016 அன்று நபிஷா பானு வங்கி கணக்கில் ரூபாய் எழுபதாயிரம் செலுத்தினேன். அதே நாள் ஹாரிப் மற்றும் திருமூர்த்தி ஆகியோரின் வங்கி கணக்கில் தலா பத்தாயிரம் செலுத்தினேன்.

06.07.2016 அன்று சென்னையில் இருந்து ரயில் மூலம் கிளம்பி டெல்லிக்கு சென்று 09.07.2016 அன்று அதிகாலையில் டெல்லியிருந்து துபாயிக்கு போகலாம் என்று திருமூர்த்தி சொன்னார். அதன்படி நான் கிளம்பி போனேன். 09.07.2016 அன்று டெல்லி விமான நிலையத்திற்கு சென்று சோதனைக்கு சென்றபோது எங்களுக்கு கொடுத்த விஷா கிளியரன்ஸ் கிடைக்கவில்லை என்று சொல்லி அனுமதிக்கவில்லை. ஹாரிப் எங்களுடன் வந்திருந்தார். அவரிடம் கேட்டதற்கு இன்னும் ஒரு வாரத்தில் வேறு விசா ரெடி பண்ணி தருவதாகவும் இல்லையென்றால்பணத்தை திரும்ப கொடுத்துவிடுவதாக சொன்னார். ஹாரிப் மட்டும் அன்றைய தினம் டெல்லியில்இருந்து விமானத்தில் வந்துவிட்டார். எங்களை சொந்த காசு மூலம் திரும்பி வந்துவிடசொன்னார். அதன்பிறகு திருமூர்த்தியிடம் கேட்டபோது ஹாரிப் வீட்டை காலி

செய்துவிட்டதாக சொன்னார். அதன்பிறகு நாங்கள் 01.08.2016 தேதி அன்று பெரம்பலூர் மாவட்ட குற்ற பிரிவு அலுவலகத்திற்கு வந்தோம். நாங்கள் வெளியூர் என்பதால் அடிக்கடி பெரப்லூருக்கு வரமுடியாது என்பதால் திருமூர்த்தியிடம் புகார் கொடுக்க சொன்னோம். திருமூர்த்தி புகார் கொடுத்தார். போலீஸார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>5வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

5வது எதிரிக்கும், எனக்கும் எந்தவித பணபரிமாற்றமும் நடைபெறவில்லை என்றால்சரிதான்.

**<u>1வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

தற்போது நீதிமன்றத்தில் முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரங்களைத்தான் போலீஸ் என்னை விசாரித்தபோதும் சொன்னேன். நான் அ.சா. 2மூலம் அ.சா. 1 ன் வங்கி கணக்கில்தான் பணம் செலுத்தினேன் என்றால் நபிஷா பானுவின் வங்கி கணக்கில் பணம் செலுத்தினேன். திருச்சியில் மெடிக்கல் டெஸ்ட் எடுத்ததற்கான சான்றிதழ்களை போலீஸாரிடம் கொடுக்கவில்லை. நான் திருச்சிக்கு மெடிக்கல் சர்டிவிக்கேட் எடுக்க செல்லவில்லை என்றாலும், அங்கு நான் 1வது எதிரியை பார்க்கவில்லை என்றாலும் சரியல்ல. திருமூர்த்தி சொன்ன வங்கி கணக்குகளில்தான் நான் பணம் செலுத்தினேன் என்றால் சரியல்ல. 1வது எதிரி சொன்னதன் பேரில் வங்கி கணக்குகளில் பணம் செலுத்தினேன். 1வது எதிரியும் வெளிநாட்டிற்கு வேலைக்கு செல்வதற்காக எங்களுடன் டெல்லிக்கு வந்தார் என்றால் அவர் எங்களை வழி அனுப்பிவைக்க வந்தார். 1வது எதிரியும் எங்களுடன் வெளிநாட்டிற்கு வேலைக்கு செல்வதற்காகத்தான் வந்தார் என்றாலும், அவரும்

ஏமாற்றம் அடைந்துதான் திரும்பி வந்தார் என்றால் சரியல்ல. எனக்கும், அ.சா. 1 மற்றும் அ.சா. 2க்கும்தான் நேரடியான தொடர்பு இருந்தது என்றாலும், 1வது எதிரிக்கும், எனக்கும் எந்தவித நேரடி தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

2, 3 எதிரிகள் தரப்பில் தனிதனியாக கு.வி.மு.ச. பிரிவு 317 மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால் அவர்கள் தரப்பில் வழக்கறிஞர்கள் நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை. போதிய வாய்ப்பு வழங்கியும் குறுக்கு விசாரணை செய்ய முன்வராத காரணத்தினால் குறுக்கு விசாரணை இல்லை என்று முடித்துவைக்கப்படுகிறது.

Taken down by / before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused/ pleader and admitted by the witness to be correct.

Sd/-.
Judicial Magistrate No.I,
Perambalur.

JMPBLR